
ஸ்ரீ:



# ஆசார்ய பாதுகா ஆராதனச் செயல்முறை

ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன்
ஸ்ரீரங்கராமாநுஜ மஹா தேசிகன்

**75வது**

*திருநக்ஷத்ர வைபவத்தில்*
*அவரது திருக்கரங்களால்*
*மும்பையில்*

**27-5-2009** *அன்று*
*வெளியிடப்பெறுவது*

## "வைணவன் குரல்"

உலக வைணவர்கள் ஒரு குடையின் கீழ்
21/1, பராங்குசபுரம் ரோடு, கோடம்பாக்கம்,
சென்னை-24. போன் : 044-2372066/23721666

(இலவசம்) **வெளியீடு**

ஸ்ரீ:

# ஆசார்ய பாதுகா ஆராதனச் செயல்முறை

வைணவர்களாகிய நாம் நமக்கு நல்லறிவு வழங்கி, நன்னெறிகாட்டி, திருமால்திருவடியில் நம்ரக்ஷணப் பொறுப்பை ஸமர்பித்து, நாம் நேரில் கண்ணால் கண்டுய்யத் தெய்வத் திருவுருவத்துடன் ஸேவைஸாதிக்கும் ஆசார்யனை, பற்பல முறைகளில் போற்றி உய்யவேண்டும் என்று நியதி. இது நம் கடமை.

இன்று புகைப்படம் உள்ளது, கை கூப்புகிறோம். முழுத் தனியன் அனுஸந்திப்பது நன்று அல்லது 'வாக்யத் தனியனை' உச்சரிக்கவும்.

"ஸ்ரீமதே ரங்கராமாநுஜ மஹாதேசிகாய நம:" இது மந்திரம் எனக் கொண்மின்! ஆனால் இதைப் புறத்தே வாய்விட்டுச் சொல்லி உச்சரிப்பது தகும்.

பெருமாள் திரு ஆராதனம் முக்கியம். இல்லையில்லை! தினம் காலையில் நாம் அதை நமக்கு இயன்றவளவு, நம் மனச்சாட்சிக்கு விரோதமின்றி, செய்யவேண்டும். பெருமாளை ஏமாற்ற முடியாது! இயன்ற அளவு செய்ம்மின்! பெருமாள் திரு ஆராதனமின்றி காலை உணவு உண்ணும் செயல் ஒரு பாபச்செயல்! எச்சரிக்கை! (60நிமிடம் / 10 நிமிடம் இயன்றபடி செய்க!).

சில குறிப்பிட்ட நாள்களில் உபவாசம் இருக்கிறோம்.

ஏகாதசி போன்று அந்த நற்செயல், நிறைவு பெறுவது.

மறுநாள் காலை பெருமாள் திருவாராதனம் செய்வதுடன், ஆசார்ய பாதுகைகளுக்குத் திரு ஆராதனம் செய்வது மூலமே!

உங்கள் இல்லத்தில் உமது ஆசார்ய பாதுகை கட்டாயம் இருக்க வேண்டும்.

1. தொடக்கம் உரிய முறையில் (மர/உலோகத்) தட்டில் ஆசார்ய பாதுகைகளை எழுந்தருளப் பண்ணவும்.

2. வாக்யத் தனியனாவது அனுசந்தித்து, "அஸ்மத்-ஆசார்ய பாதுகாராதனம் கரிஷ்யே" என்று ஸங்கல்பித்துக் கொள்ளவும்.

3. உரிய முறையில் தண்டம் ஸமர்ப்பிக்கவும்.

4. இரண்டு வட்டில் / மர அகல், பாதுகைக்கு முன்புறம் வைத்துக்கொள்ளவும்.

5. இடது புறம் உள்ள வட்டிலில் சுத்தமான பூரித்த தீர்த்தம் - பச்சைக்கற்பூரம், ஏலாதிகள், வாஸனைத்ரவ்யங்கள் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட தீர்த்தம் எடுத்துக்கொள்ளவும்.

6. ஆராதனம் உபதேசமாயிருந்தால், உசிதப்படி, அந்த தீர்த்தத்தில் ஓர் உத்தரிணீ உயரத் தூக்கிக்காட்டி, திரு அஷ்டாக்ஷரம் சொல்லி, "விரஜாம் ஆவாஹயாமி"

என்று கூறவும். (திருநாட்டில் ஓடும் விரஜா நதிபோல, இந்த வட்டில் தீர்த்தமும் புனிதமாகிறது. இல்லையேல் நமது இல்லத் தீர்த்தம் எத்தனை தூய்மையற்றது ! - சிந்திக்கவும்!)

7. ஆசார்யனின் வாக்யதனியனை உச்சரித்து

அர்க்யம் ஸமர்ப்பயாமி (ஒரு தடவை)

பாத்யம் ஸமர்ப்பயாமி (இரண்டு தடவை)

ஆசமநீயம் ஸமர்ப்பயாமி (மூன்று தடவை)

உபசாரமாகச் செய்து, பிரதிக்ரஹவட்டிலில் (படிக்கத்தில்) சேர்க்கவும்.

8. இயன்ற எண்ணிக்கையில் பாதுகைகளை நீராட்டவும். வாக்யத்தனியன் அனுசந்திக்கவும்.

9. தட்டுத் தீர்த்தத்தை ஜாக்ரதையாக, பிரதிக்ரஹ வட்டிலில் சேர்த்துக்கொள்ளவும்.

10. உபசாரமாக பாதுகா வஸ்த்ரத்தினால், பாதுகைகளைத் துடைத்து, தட்டில் திரும்ப எழுந்தருளப் பண்ணவும்.

11. தனியாகச் சந்தனம் சேர்த்தோ, வாங்கி வைத்துள்ள சந்தனப் பொடியைக் குழைத்தோ, பாதுகைகளில் விரல்களால் தடவி உபசாரமாக "கந்தம்

ஸமர்ப்பிக்கவும்" (சாந்தம் என்பர்) "கந்தம் ஸமர்ப்பயாமி" என்க.

12. துளஸி கூடாது பெருமாளுக்கு ஸமர்ப்பித்தது கூடாது, வேறு புஷ்பங்கள், இதழ்கள் கொண்டு அர்ச்சனை செய்யவும்.

"அஸ்மத் ஆசார்ய பாதுகாப்யாம் நம:"

என்றோ

"ஸ்ரீமத் - ரங்கராமாநுஜ மஹாதேசிக திவ்யபாதுகாப்யாம் நம:"

என்றோ

அர்ச்சிக்கலாம்.

இந்த புஷ்ப இதழ்களை நாம் கண்ணில் ஒற்றிக்கொள்வது, ஆசார்ய ப்ரஸாத ஸ்வீகாரம். ஆகவே தூய, இயற்கை ரோஜா இதழ்கள் கிடைத்தால் தரம். அதை, ஒன்றிரண்டை வாயில் போட்டுக்கொண்டு, திருப்தியுறக்கூடும்.

13. நிவேதனம் - பாதுகை ஆசார்ய விக்ரஹம் போல. அந்தப் பரிவும், பக்தியும் உள்ளது, நல்ல வைணவனுக்கு. ஆகவே ஏதோ பொருத்தமாக ஒன்றை நிவேதனம் செய்யத்தகும். பொதுவாக, பெருமாளுக்கு நிவேதனம் ஆனது ஆசார்ய பாதுகைக்கு நிவேதனம்

செய்வது பொருந்தாதே! அபசாரமாகுமே! நம் ஆசார்யர் அது போலச் செய்வதை அனுமதிப்பாரோ? மாட்டார்!

வாழைப்பழம் 2, உலர்ப்பழம், திராக்ஷை போன்று, முந்திரிப் பருப்பு, கற்கண்டு, வாதாம் பருப்பு, ஏதோ அவரவர் சக்திக்கு ஏற்ப. பிறகு நாம் ஸ்வீகரிக்க, ஏற்று உண்ண!

இல்லத்தில் உள்ள ஆசார்யபக்தர் எல்லோருக்கும் பிரஸாதம் கிடைக்கிற ரீதியில், ஸமர்பித்து, "அஸ்மத் ஆசார்ய பாதுகாப்யாம் நிவேதனம் ஸமர்ப்பயாமி" என்று அனுசந்திக்கவும்.

14. கர்பூரஹாரத்தி செய்யவும் (இயன்றால், முன்பே, திருமஞ்சனம் முடிந்த பின் தூப, தீப உபசாரங்கள் செய்யக்கூடும்).

அஸ்மத் ஆசார்ய பாதுகாப்யாம் மங்களார்த்தம் கற்பூரம் நீராஞ்ஜனம் ஸமர்ப்பயாமி" என்க. தண்டனிட்டுக்கொண்டு, ஆசார்யத்தனியன் ச்லோகமே சொல்லவும்.

"ஆசார்ய பாதுகே! மம அபசாரந் க்ஷமஸ்வ" என்று விண்ணப்பிக்கவும். (அபசாரக்ஷமாபணம்)

15. இது இல்லங்களில் பக்த சிஷ்யன் இந்த அவசர யுகத்தில் இயன்ற அளவு அனுஷ்டிக்க வென்று இயற்றப்பட்ட செயல்முறை.

ஆச்ரமம் / மடம் / ஆசார்ய திருமாளிகை போன்ற ஸ்தலங்களில் ப்ராசீனமான முறை ஏதும் இருக்கலாம். முரண்பாடு காண்பது பொருத்தமன்று.

வஸ்த்ரத்தால் பரிவுடன் மூடி, தலைமேல் ஏற்று, தட்டை, "யதாஸ்தானம்" செய்யவும். முடிந்ததற்கு அடையாளமாகக் கைகூப்பி, மீண்டும் தனியன் அல்லது வாக்யத்தனியனாவது சொல்லவும்.

ஆசார்ய பாதுகா தீர்த்தம் = ஸ்ரீபாததீர்த்தம் ஸ்வீகரிக்கும் (ஏற்றுக்கொள்ளும்) உரியமுறை.

பெருமாள் தீர்த்தாதிகள் ஸ்வீகரித்துக்கொள்வது ஸ்ரீ துளஸி ஏற்பது, காதில் தரிப்பது, ஓரிண்டு இதழ்கள் உண்டு கிருதார்த்தராவது - முதலில்

பிறகு, தானும் மற்ற இல்லத்தவரும் ஓர் / இரண்டு துளிகள் தலைமீது ப்ரோக்ஷணம் தெளித்துக்கொள்க.

பிறகு ஒன்றோ / மூன்றோ உத்தரிணித் தீர்த்தம் (நடைமுறை வசதிப்படி) கையில் முறையாக ஏற்று, பருகி முடிக்கவும்.

ஸ்ரீபாத தீர்த்தம் ஸ்வீகரிக்கையில், ஆசார்ய தனியன் முழுதும் அனுஸந்திப்பது, ஒரு வழக்க முறை உண்டு, சில ஸம்ப்ரதாயங்களில். வேறு சில ஸம்ப்ரதாயங்களில், பெருமாள் தீர்த்தத்துக்கில்லாதது போல், இதற்கும் மந்த்ர / ச்லோகாதிகள் இல்லை, கூடாது ! என்பர்.

இன்னும் சில ஸம்ப்ரதாயங்களில் தனியன் சொல்வது மட்டுமல்லாமல், விசேஷமாகக் கீழ்க்கண்ட ச்லோகம் அனுசந்திப்பது முறை.

**"ஏதத் ஸமஸ்த பாபாநாம்**
**ப்ராயச்சித்தம் மநிஷிபி : |**
**நிர்ணீதம் ஹ்யஸ்மதாசார்ய**
**பாதுகாம்பு நிஷேவணம் ||"**

"எம் ஆசார்ய ஸ்ரீ பாத தீர்த்தத்தைப் பருகுவதாகிற செயல்பாடு, பெரியோர்களால், எமது ஸமஸ்த பாபங்களும் போயொழிவதாகிற பலன் தரும் ப்ராயச்சித்தமாக நிர்ணயிக்கப்பட்டதன்றோ!"

குறிப்பு : 1. பாரணை இதன் மூலம் பூர்த்தி பெறுகிறது. 2. நமது வாழ்க்கை முறையில் அநாசாரம், தகாத உணவு துய்த்தல், நெறிமுறை பிறழல், போலப் பல தப்புக்கள் நேரும். மனத்திருப்தி, அக-புறத்தூய்மை பெற பாதுகா ஆராதனம் உரிய, எளிய, மலிவான பிராயச்சித்தமன்றோ ! செய்க !

(உரிய முறையில் அறிஞர் ஆலோசனையில் மாற்றங்கள் செய்துகொள்ளலாம்)

ஆசார்ய ஸ்ரீபாதரேணு
**- Dr.V.N.வேதாந்த தேசிகன்**